# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடமாகாணம்

**பயிற்சிப் பரீட்சை - பெப்ரவரி 2017**

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

## வினாத்தாள் - II

2

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் .......................................................

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- செய்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | ஒப்பம் |
|---|---|
| முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதெனச் சான்றுப் படுத்துகின்றேன். | V/II/T/ |
| இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரிசீலனையின் மதிப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன். | V/II/T/ |
| கணித பரீட்சகர் மதிப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன் | V/II/T/EMF/ |
| பிரதம பரீட்சகர் மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதெனத் தெரிவிக்கின்றேன் | V/II/T/CH/ |

✧ **பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்குக.**

**01)** பரந்த அவ் வயல் வெளியின் மத்தியில் குளம் ஒன்று அமைந்திருந்தது. அதிகாலை எழுந்து வந்த சூரியனின் பொன் நிறக்கதிர்களால் குளத்தில் நீர் தங்கத்தகடு போல பளபளத்துக் கொண்டிருந்தது.குளக்கரையில் ஆங்காங்கே பெரிய பெரிய மருத மரங்கள் நின்றன. அவற்றில் அமர்ந்திருந்த பட்சிகள் ஒலி எழுப்பிக் கொண்டிருந்தன. இவை பார்ப்பதற்கு அழகையும் கேட்பதற்கு இனிமையையும் தரும் இயற்கை தந்த கொடையாகும்.

✧ **கீழே தரப்படும் 1 தொடக்கம் 6 வரையான வினாக்களுக்கான விடையைப் பந்தியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

*01.* பறவைகள் என்பதன் ஒத்த சொல்லை எழுதுக.

.................................................................................................................................

*02.* செயற்கை என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

.................................................................................................................................

*03.* இங்கு வந்துள்ள உவமானத்தை எழுதுக.

.................................................................................................................................

*04.* பந்தியில் இடம்பெறும் இரட்டைக்கிளவிச் சொல்லை எழுதுக.

.................................................................................................................................

*05.* இங்கு வந்துள்ள அடுக்குமொழிச் சொல்லை எழுதுக.

.................................................................................................................................

*06.* கீழ்க்காலும் சுழியும் காணப்படும் சொல்லை எழுதுக.

.................................................................................................................................

(6 x 1 = 6 புள்ளிகள்)

**02)** **இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தில் எழுதுக.**

1) கீரியைக்கண்ட பாம்பு ................................ யினுள் புகுந்தது. (அலை, அளை, அழை)

2) இன்று கிராமியக் கலைஞர்களைக் காண்பது ............................ காரியம் ஆகும். (அரிய, அறிய)

3) நீண்ட நாட்கள் நோய் நொடியின்றி உயிர் வாழ வேண்டுமானால் ................................ உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும். (ஊன்,ஊண்)

(3 x 1 = 3 புள்ளிகள்)

**03)** **முதலில் தரப்பட்டுள்ள சொல்லுடன் பொருந்தாத சொல்லின் கீழ் கோடிடுக.**

1) துன்பம் : இன்னல், அல்லல், உவகை, இடர்

2) அழகு : எழில், வனப்பு, சுந்தரம், அலங்கோலம்

(2 x 1 = 2 புள்ளிகள்)

**04)** **பின்வரும் தொடர்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக.**

1) அரண்மனையில் பெண்கள் வசிக்கும் இடம் ..........................................................................

2) எழுபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா ................................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

**05)** **கீழே தரப்பட்டுள்ள பழமொழிகளைப் பூரணப்படுத்துக.**

1) காற்றுள்ளே போதே ...........................................................

2) சீரைத் தேடின் ...........................................................

(2 x1= 2 புள்ளிகள்)

சுட்டெண் :..................

**06) கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குக.**

1) அனைவரும் / பிள்ளைகள் / கற்க / கல்வி / வேண்டும்

..........................................................................................................................................................

2) நின்றனர் / எல்லோரும் / வானத்தைப் /கொண்டு / பார்த்துக்

..........................................................................................................................................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

**07) இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1) " கேடில் விழுச் செல்வம் கல்வி " என்று பாடியவர் ............................................... ஆவார். (பாரதியார், திருவள்ளுவர், ஔவையார்)

2) "மன்னனும் மாசறக் கற்றோனும்......" என்னும் பாடல் இடம் பெறும் நூல் ................................ ஆகும். ( மூதுரை, திருக்குறள், நல்வழி)

3) மகாபாரதத்தில் நன்றி மறவாமைக்கு ................................................... எடுத்துக் கூறப்பட்டான். ( கும்பகர்ணன் , ஏகலைவன், கர்ணன்)

(3 x 1 = 3 புள்ளிகள்)

**08) மிகச்சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லின் கீழ் கோடிடுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | 1. செய்நன்றி | 2. செய்ந்நண்றி | 3. செய்ந்நன்றி | 4. செய்னன்றி |
| 2) | 1. இங்ஙணம் | 2. இங்ஙனம் | 3. இங்கனம் | 4. இங்கணம் |

(2 x 1 = 2 புள்ளிகள்)

**09) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை எழுதி திருக்குறளைப் பூரணப்படுத்துக.**

1) இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
...................................................... செய்து விடல்.

2) காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
.............................................. மாணப் பெரிது.

(2 x 1 = 2 புள்ளிகள்)

**10) "நான் ஒரு விளையாட்டு வீரனானால் ...... " என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.**
**( ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம் பெறவேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகள் சரியாக இருக்கவேண்டும்.**

1) ..........................................................................................................................................................

2) ..........................................................................................................................................................

3) ..........................................................................................................................................................

(3 x 2 = 6 புள்ளிகள்)

**11) பின்வரும் படத்திற்குப் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

1.

.........................................

2.

.........................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

**12) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

1. I am drinking water ................................................

2. I will come tomorrow ..............................................

(2 x 1= 2 புள்ளிகள்)

**13)** **பின்வரும் சொற்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை எழுதுக.**

1) நூலகம் :- .................................  2) அணில் :- ..................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

**14)** **பின்வரும் வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.**

1) வேகயென் துவன்ன :- ........................................................................................................

2) செல்லம் கறன்ன யமுத :- ........................................................................................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

✣ **தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் விடையை எழுதுக.**

**15)** இலக்கங்களில் எழுதுக.

எண்பதாயிரத்து முந்நூற்று ஐம்பது ..........................................................................................

**16)** எண்கோலத்தில் அடுத்து வரும் எண்களை எழுதுக.
1, 2, 6, 24, ..........., ............

**17)** 1. (xix – vii) இன் பெறுமதியை உரோம எண்ணில் எழுதுக.

..........................................................................................................

2. தரப்பட்ட எண்ணுக்கு அடுத்து வரும் உரோம எண்ணை எழுதுக.

xvi : ..........................

**18)** வியாபாரி ஒருவர் முதல் நாள் 650 தேங்காய்களையும், இரண்டாம் நாள் முதல் நாளை விட 25 தேங்காய்கள் கூடுதலாகவும் விறபனை செய்தார். அவர் இரு நாட்களிலும் விற்பனை செய்த தேங்காய்களின் எண்ணிக்கை யாது?


..........................................................................................................................................

**19)** ஒரு மண்டபத்தில் 2 கதிரைகள் வீதம் உள்ள 12 நிரைகளும், 4 கதிரைகள் வீதம் உள்ள 5 நிரைகளும் உள்ளன. எனின் அம் மண்டபத்தில் உள்ள கதிரைகளின் எண்ணிக்கை யாது?

..........................................................................................................................................

**20)** ஒரு குளிர்பானப் போத்தல் 6 பேரை உபசரிக்கப் போதுமானது எனின் 90 பேரை உபசரிக்கத் தேவையான குளிர்பானப் போத்தல்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................................................................


**21)** 

இவ்வுருவினுள்ளே உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

**22)** விமலா A என்னும் இடத்திலிருந்து 10m தெற்கு நோக்கிச் சென்று பின் அங்கிருந்து தனது வலது கைப்பக்கம் திரும்பி 10m பயணித்து B என்ற இடத்தை அடைந்தாள். தற்போது அவள் இருப்பது A எனும் இடத்திற்கு எத்திசையில் ஆகும்?

..........................................................................................................................................

**23)** 

1. இத்திண்ம உருவின் பெயர் யாது?

..........................................................................................


2. இத்திண்ம உருவில் உள்ள உச்சிகளின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

**24)** ஒரு பெட்டியில் உள்ள தோடம்பழங்களில் 3⁄4 பங்கு விற்கப்பட்டதன் பின்பு 7 தோடம்பழங்கள் எஞ்சியிருந்தன. எனின் பெட்டியில் ஆரம்பத்தில் இருந்த தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது?

.............................................................................................................................................

**25)**




இவ்வுருவின் சுற்றளவு யாது?

...........................................................................

**26)** நீளம் 7m ஐக் கொண்ட கம்பியொன்றில் இருந்து 40cm நீளமான 12 கம்பித்துண்டுகள் வெட்டப்பட்ட பின் எஞ்சியுள்ள கம்பித்துண்டின் நீளம் யாது?

........................ மீற்றர் ....................... சென்ரிமீற்றர்


**27)** வெற்றிடத்தில் வரவேண்டிய விடையை எழுதுக.

| பொருள் | அளவு | செலுத்திய பணம் ரூபா | சதம் |
|---|---|---|---|
| பருப்பு | 2kg | 140 | 00 |
| அரிசி | 1kg | 60 | 00 |
| சீனி | 3kg | ............ | ............ |
| மொத்தம் | | 560 | 00 |

**28)** 1250ml கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தில் 900ml நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் மேலும் 500ml நீரைக் கவனமாக ஊற்றும் போது பாத்திரத்திலிருந்து வெளியேறும் நீரின் கனவளவு யாது?

.............................................................................................................................................

**29)** கொழும்பிலிருந்து திருகோணமலைக்குச் செல்லும் பாதை ஒன்றின் தூரம் km இல் காட்டப் பட்டுள்ளது.




1. குருநாகலில் இருந்து தம்புள்ள செல்வதற்கான தூரம் எத்தனை km ஆகும்?

...........................................................................................


2. தம்புள்ளையிலிருந்து கந்தளாய் செல்வதற்கான தூரம் எத்தனை km ஆகும்?

...........................................................................................

**30)** 1. வரைபிலுள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையில் இருக்கும் வெற்றிடத்தைப் பூரணப் படுத்துக.

2. அட்டவணையிலுள்ள தகவல்களுக்கேற்ப வரைபை பூரணப்படுத்துக.

| பழவகை | பழங்களின் எண்ணிக்கை |
|---|---|
| அப்பிள் | 15 |
| மாம்பழம் | 10 |
| தோடம்பழம் | 25 |
| கொய்யா | 5 |
| அன்னாசி | ................. |




(16 x 2 = 32 புள்ளிகள்)

✧ **மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

31. நான் எனது வீட்டுக்கும் எனது பாடசாலைக்கும் செய்ய வேண்டிய பொறுப்புக்களையும் கடமைகளையும் செய்து பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் நல்லதொரு பிள்ளையாகத் திகழ்வேன்” எனக் கூறும் படிநிலை யாது?

1) பிரார்த்தனை 2) மன உறுதி 3) உடலைத் தளர்த்தல் 4) மனதைத் தளர்த்தல்

32. ஒரு வித்திலைத் தாவரமாகவும் அதேவேளை உணவாகவும் பயன்படும் வித்து.

1) பலா 2) சோளன் 3) போஞ்சி 4) பப்பாசி

33. வித்து முளைத்தலுக்குத் தேவையான காரணிகளுள் ஒன்று.


1) காற்று 2) சூரியஒளி 3) முதிர்வடையாத வித்து 4) பாளை

34. தேசிய இலட்சனையில் அடங்காதது.

1) நிறைகலசம் 2) மலரிதழ் 3) அரசமிலை 4) நெற்கதிர்

35. இலங்கைக்கே உரிய தற்போது அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய மலர்.

1)நீல அல்லி 2) அல்லி 3) தாமரை 4) அந்தூரியம்

36. 

அருகிலுள்ள உடுத்தொகுதியின் பெயர்

1) சிறுகரடி 2) ஓராயன்


3) விருச்சிகம் 4) கலப்பை

37. கொழும்பு நகரைச் சுற்றி ஓடும் நதியின் பெயர்.

1) தியவன்ன ஓயா 2) களுகங்கை 3) களனி கங்கை 4) தெதுறு ஓயா

38. மின்குமிழிலுள்ள வாயு எது?

1) ஆகன் வாயு 2) காபனீரொட்சைட் 3) ஒட்சிசன் 4) நீர்

39. 

இப்படம் தெளிவுபடுத்துவதுடன் சக்தியை விரயமாக்கும் விளையாட்டாக அமைவது.

1) கிளித்தட்டு 2) சடுகுடு

3) கபடி 4) பசுவும் புலியும்

40. நவீன போக்குவரத்துச் சாதனங்களால் ஏற்படும் பிரச்சினையாகக் கருதப்படுவது.


1) குறைந்த நேரம் 2) சுற்றாடல் மாசடைதல்

3) விரைவான பயணம் 4) அதிக எண்ணிக்கையானோர் பயணித்தல்

41. தரமான தேயிலையை நீரில் இடும் போது தோன்றும் நிறம்

1) கபிலம் 2) இளம்மஞ்சள் 3) சிவப்பு 4) ஊதா

சுட்டெண் :..................

42. 
இக்காந்தத்தின் பெயர்

1) குதிரை இலாட வடிவக் காந்தம் (பரியிலாடக் காந்தம் 2) குண்டுமுனைக் காந்தம்

3) சட்டக்காந்தம் 4) U வடிவக்காந்தம்




43. குளிர்காலத்தில் அணியக்கூடியதும் விலங்கு நாரினாலும் ஆன ஆடை

1) கம்பளி 2) பட்டு 3) பருத்தி 4) நைலோன்

44. “ரிச்சர்ட்” அளவினால் அளக்கப்படும் இயற்கை அனர்த்தம் பின்வருவனவற்றுள் எது?

1) சுனாமி 2) மழை 3) நிலநடுக்கம் 4) சூறாவளி

45. வானில் பூரண சந்திரன் தோன்றி ஒரு வாரத்தின் பின் காணக்கூடிய சந்திரனின் தோற்றம்.


1)  2)  3)  4) 

46. இலங்கை மக்கள் அடிக்கடி சந்திக்கும் இயற்கை அனர்த்தம் எது?

1) சூறாவளி 2) மண்சரிவு 3) இடிமின்னல் தாக்கம் 4) சுனாமி

47. ஆதிகாலத்தில் உணவுப்பொருட்களை பாதுகாப்பாக வைப்பதற்கும் பிராணிகள் தீண்டாத வண்ணம் பாதுகாக்கவும் பயன்படுத்தப்பட்ட பாரம்பரிய உபகரணம்.

1) திருகணை 2) உறி 3) பரண் 4) அலுமாரி

48. 
அருகே தரப்பட்டுள்ள மின்காந்தத்தில் கவரும் குண்டூசிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும் செயற்பாடு

1) கம்பிச்சுருளின் எண்ணிக்கையை ஐதாக்குதல்(குறைத்தல்)

2) மின்கலங்களின் எண்ணிக்கையை குறைத்தல்.





3) மின்கலங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

4) ஆணிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

49. இலங்கை எத்தனையாவது சுதந்திரதினத்தை 2017 இல் கொண்டாடியது?

1) 68 2) 69 3) 67 4) 46

50. பின்வருவனவற்றுள் மின்குமிழ் ஒளிர்வதை சரியாகக் காட்டும் படம்.


1)  2)  3)  4) 

51. காடுகளைக் குறித்துக் காட்டுவதற்கு பயன்படுத்தப்படும் நிறம்

1) கறுப்பு 2) பச்சை 3) மஞ்சள் 4) கபிலம்

52. செம்மஞ்சள் வர்ணம் நம்மிடம் இல்லாத போது அவ்வர்ணத்தைப் பெறுவதற்காக நாம் சேர்க்கவேண்டிய வர்ணக் கலவைகள்

1) பச்சை+ நீலம்+ வெள்ளை
2) பச்சை+ நீலம்+ வெள்ளை
3) மஞ்சள்+ நீலம்
4) சிவப்பு+ மஞ்சள்

53. 

இப்படக்குறியீட்டினால் உணர்த்தப்படுவது

1) இலங்கை மின்சார சபை
2) மின் விநியோகிக்கும் இடம்
3) இலங்கை கட்டளைகள் பணியகம்
4) பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபை

54. பாடசாலையின் கடந்த கால சம்பவங்கள் நிகழ்வுகளை அறிய உதவும் ஆவணம்

1) மகாவம்சம் 2) சூளவம்சம் 3) சம்பவத் திரட்டுப்புத்தகம் 4) இராமாயணம்

55. போக்குவரத்து தொடர்பான பிரச்சினைகளுக்கு அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்

1) 1955 2) 1929 3) 1954 4) 119

56. சர்வதேச புத்தக தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?

1) ஏப்ரல் 22 2) ஏப்ரல் 23 3) மார்ச் 22 4) மார்ச் 08

57. எமது நாட்டுக்குரிய பிராணிகளில் முலையூட்டி, வண்ணத்துப்பூச்சி, மீன், பறவை இனங்கள் குறிப்பவை முறையே

1) மரநாய், கொம்பு ஓணான், சேல்கொண்டை, நரைப்புழுணி
2) அழகிய சொர்க்கம், நீர்ப்பாம்பு, மரத்தேரை, மரநாய்
3) சுண்டெலி, கொம்பு ஓணான், நாகணவாய், சுண்டெலி
4) கோழிக்கொண்டை, செண்பகம், சுண்டெலி, பச்சைப்பாம்பு

58. **SLDA**

இத்தர நிர்ணய சான்றிதழை அவதானிக்கக் கூடிய பொருள் எது?

1) தீப்பெட்டி 2) மின்குமிழ் 3) பற்பசை 4) இலவசபாடநூல்

59. கடதாசிகளால் மடித்துச்செய்யப்படும் ஆக்கத்தின் பெயர்

1) ஓரிகாமி 2) அல்பனா 3) கொலாச் 4) அச்சுப்பதித்தல்

60. 

இப்படம் குறித்து நிற்பவர்.


1) மகாத்மா காந்தி
2) ஆபிரகாம் லிங்கன்
3) மார்க்கோணி
4) தோமஸ் அல்வா எடிசன்

(30x1=30 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
# பயிற்சிப் பரீட்சை 02 இன் விடைகள்

**தரம் - 05** **2** **வினாத்தாள் - II**

01. 1) பட்சிகள் 2) இயற்கை 3) தங்கத்தகடு 4) பளபள
    4) பெரிய பெரிய 5) சூரியனின் / சூரியன்
02. 1) அளை 2) அரிய 3) ஊன்
03. 1) உவகை 2) அலங்கோலம்
04. 1) அந்தப்புரம் 2) பவள விழா
05. 1) தூற்றிக்கொள் 2) ஏரைத்தேடு
06. 1) பிள்ளைகள் அனைவரும் கல்வி கற்க வேண்டும்
    2) எல்லோரும் வானத்தைப் பார்த்துக் கொண்டு நின்றனர்.
07. 1) திருவள்ளுவர் 2) மூதுரை 3) கர்ணன்
08. 1) செய்ந்நன்றி 2) இங்ஙனம்
09. 1) நன்னயம் 2) ஞாலத்தின்
10.
11. 1) Flowers 2) Computer
12. 1) நான் தண்ணீர் குடிக்கின்றேன் / நான் நீர் பருகுகின்றேன் 2) நான் நாளை வருவேன்.
13. 1) புஸ்தகாலய 2) லேனா
14. 1) வேகமாக ஓடுங்கள் 2) விளையாடப்போவாமா?
15. 80350
16 . 120, 720
17. 1) XII 2) XVII
18. 1325 தேங்காய்கள்
19. 44 கதிரைகள்
20. 15 குளிர்பானப் போத்தல்கள்
21. 08
22. தென்மேற்கு
23. 1) சதுரக் கூம்பகம் 2) 05
24. 28 தோடம்பழங்கள்
25. 50m
26. 2 m 20 cm
27. ரூ 360.00
28. 150 ml
29. 1) 150 km 2) 80km
30. 1) அன்னாசி - 20 2)




| | | | | |
|---|---|---|---|---|
| 31) 1 | 32) 2 | 33) 1 | 34) 3 | 35) 2 |
| 36) 1 | 37) 3 | 38) 1 | 39) 3 | 40) 2 |
| 41) 2 | 42) 1 | 43) 1 | 44) 3 | 45) 2 |
| 46) 3 | 47) 2 | 48) 3 | 49) 2 | 50) 1 |
| 51) 2 | 52) 4 | 53) 2 | 54) 3 | 55) 1 |
| 56) 2 | 57) 1 | 58) 3 | 59) 1 | 60) 1 |